<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 77/2021

Deposition of Witness : DW 1

Name : அண்ணாதுரை (வயது – 64)

Father's Name /W/o : த/பெ ஏழுமலை

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : களத்தூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 29.07.2025.

## <u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் என் ஆதார் அட்டையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஆதார் அட்டையை இந்த வழக்கில் தாக்கல் செய்திருந்தால் என் உண்மையான வயது தெரியவரும் என்றாலும் எனக்கு பாதகமாக வழக்கு அமையும் என்றாலும் அதனால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை 2009 ஆம் ஆண்டில் இருக்கும் போது அவர் வயது என்னவென்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வாரிசு சான்றிதழில் 16.08.2010 இல் 75 வயது என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் தெரியாது. மேற்படி ஆவணம் வா.சா.ஆ – 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 16.08.2010 தேதியில் என் தந்தைக்கு 75 வயது என்று தெரிவித்துள்ளது என்றாலும் அதனால் என் தந்தை 1935 இல் பிறந்தார் என்றால் தெரியாது. 2 ஆம் வாதியின் தந்தை இறக்கும் போது என் வயது என்னவென்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஆறுமுகத்தின்

இறப்பு சான்றிதழா என்றால் எனக்கு படிக்க தெரியாது. ஆறுமுகத்தின் இறப்பு சான்றிதழின் படி 1915 பிறந்து 1960 ஆம் ஆண்டில் 45 வயதில் இறந்தார் என்றால் தெரியாது. பி.சா.ஆ – 3 பதிவு செய்யும் போது ஆறுமுகத்திற்கு 41 வயது என்றாலும் என் தந்தைக்கு 21 வயது என்றாலும் இரண்டு பேருக்கும் 20 வயது வித்தியாசம் என்றால் தெரியாது.

3. பி.சா.ஆ – 3 இல் ஆறுமுகம் களத்தூர் என்பதை அழித்துவிட்டு ஏழுமலை களத்தூர் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.சா.ஆ – 3 ஐ தடய அறிவியல் பரிசோதனைக்கு அனுப்பினால் ஏழுமலை களத்தூர் என்பது பிற்காலத்தில் எழுதப்பட்டது என்று தெரியவரும் என்றால் சரியல்ல. பி.சா.ஆ – 3 பத்திரத்தில் சாட்சி கையொப்பம் இட்டவர்கள் தற்போது உயிருடன் இருக்கிறார்களா என்றால் இல்லை. மேற்படி பத்திரத்தில் இக்குறி
.செ. குள்ளன்கைநாட்டு என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் சரிதான்.

4. நான் என் பிரமாண வாக்குமூலத்தில் ஏழுமலையின் அண்ணன் சொத்தை வாங்கினார் என்று நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஏழுமலையும் ஆறுமுகமும் சேர்ந்து வாங்கினார்கள். மேற்படி சொத்திற்கும் என் தாத்தா சின்னகுள்ளனுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் அவர் இறந்ததற்கு பிறகு அவர் இரண்டு பிள்ளைகள் வாங்கினார். இரண்டு பேரும் சேர்ந்து வாங்கினார் என்று நான் சாட்சியம் அளித்தது என் பிரமாண பத்திரத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால் தெரிவித்துள்ளேன். என் நிருபண வாக்குமூலம் பத்தி 13 இல் பொய்யான தகவல்களை தெரிவித்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.